பண்டகசாலையில் அந்த இடத்தைப் பெற்று அங்கே நடத்து வதற்கு ஏற்பாடுகளை இந்த அரசு செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் : துணைத் தலைவர் அவர்களே, சேலம் மருத்துவக் கல்லூரியிலே படிக்கின்ற மாண வர்கள் தங்குவதற்கு ஹாஸ்டல் வசதிகளும் இந்த ஆண்டு சேலத் தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே, அதற்கான ஏற்பாடு களை அரசு மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

செங்கோட்டை அரசு மருத்துவமனை.

* 2517 திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

செங்கோட்டை அரசு மருத்துவமனையில் அடிப்படை வசதி களைப் பெருக்கவும், படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக் கவும் அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: துணைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலைமைகளைப் பொறுத்தும், தேவைகளைக் கருத்தில் கொண்டும் தக்க தருணத் தில் நடவடிக்கை எடுக்கும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் ; துணைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை அரசு மருத்துவமனை பழைய திரு வாங்கூர் மஹாராஜாவினுடைய காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது. இப்போது மஹாராஜாவினுடைய ஆட்சி முடிந்து நமது கலை ஞரின் ஆட்சி நடந்துக் கொண்டிருக்கிறது. ஆட்சி மாறினாலும் கூட மஹாராஜாவினுடைய ஆட்சிக் காலத்தில் என்ன வசதிகள் இருந்ததோ அந்த வசதிகள்தான் இப்போதும் இருக்கிறது. கலைஞரின் ஆட்சியிலாவது அந்த அரசு மருத்துவமனையினுடைய படுக்கையினுடைய வசதிகளைக் கூட்டவும்—வையரிங் பண்ணி 50 வருஷம் ஆச்சு. அதிலே ஆப்பரேஷன் நடக்கும்போது ஃபேன் கீழே விழுந்து டாக்டர் சாகப் பார்த்தார். இது பத்திரிகையிலே வந்தது. இவற்றை கருத்தில் கொண்டு—அரசு வேகமாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே, கலைஞருடைய ஆட்சியில் அனைத்தும் நடக்கும் என்பதை உறுப்பினர் அவர்கள் மனப் பூர்வமாக ஏற்றுக்கொண்டதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய எண்ணத்தினுடைய எதிர்பார்ப்புகளைப் போலவே இந்த ஆண்டு 20 படுக்கைகளை அங்கே அதிகரிப்பதற்காக அரசினுடைய கருத்துருவில் இருக்கிறது. நிதி நிலையைப் பொறுத்து அதற்கான அனுமதிகளை அரசு வழங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எடப்பாடி நகர அரசு பொது மருத்துவமனை.

* 5321 திரு. க. பழனிசுவாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

எடப்பாடி நகர அரசு பொது மருத்துவமனையில் அதிக டாக்டர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. க. பழனிசுவாமி : எடப்பாடி அரசு பொது மருத்துவ மனைக்கு அதிக நோயாளிகள் வருகின்ற காரணத்தினால் டாக்டர்கள் குறைவாக இருப்பதால் பல மணி நேரம் நோயாளிகள் காத்திருக்கவேண்டிய நிலை இருக்கிறது. குறிப்பாக அதிகமாக மருத்துவமனைக்கு சிகிச்சை பெற குழந்தைகள் வருவதால் அவர்களுக்காவது குழந்தைகள் சிகிச்சை பிரிவு என்று தனியாகத் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே இப்போது 26 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை செயல்படுகின்றது. அந்த எண்ணிக்கை உள்ள மருத்துவமனைக்கு 3 மருத்துவர்கள் மட்டுமே நியமிக்கப்படுவது வழக்கம். அங்கே 3 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மருத்துவர்களுடைய எண்ணிக்கையைக் கூட்டுகின்ற யோசனை எதுவும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.